[2003 மார்ச் 31

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### விசைத்தறித் துணிகள் மீது மத்திய அரசின் கலால் வரியை நீக்க, விலக்களிக்கக் கோருதல் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் தங்கள் அனுமதியுடன் இம்மாமன்றத்திற்கு, மத்திய அரசால் விசைத்தறி நெசவுத் தொழில் மீது இந்நிதியாண்டில் விதிக்கப்பட்ட கலால் வரி குறித்து, அறிக்கை ஒன்றை அளிக்கிறேன்.

இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த விசைத்தறிகளில் 25 சதவிகிதம் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளன. தமிழ்நாடு முழுவதும் சுமார் 4 இலட்சம் விசைத்தறிகள் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் விசைத்தறி நெசவுத் தொழில் சிறு முதலீட்டிலான தொழிலாக நடைபெற்று வருகிறது. சிறு முதலீட்டில் நடைபெறும் இத்தகைய விசைத்தறி நெசவுத் தொழில்கள் எல்லாம், குடும்பத்தில் உள்ளவர்களே சுய வேலை செய்யும் குறுந்தொழிலாக நடந்து வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு நிதிநிலை அறிக்கையிலே விசைத்தறித் துணிகள்மீது 10 சதவீதம் கலால் வரி விதிப்புச் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சிறு தொழிலாக இயங்கி வரும் விசைத்தறி நெசவுத் தொழில் மிகவும் நலிவடைந்து பாதிக்கப்பட்டுள்ளதாலும், மைய அரசின் இந்தப் புதிய வரி விதிப்பால் குடும்பத்தவர்களே மேற்கொள்ளும் குடிசைத் தொழிலாகவும், குறுந்தொழிலாகவும், சிறிய முதலீட்டிலுள்ள இத்தகைய விசைத்தறிகள் எல்லாம் மேலும் பலவித இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகும் சூழ்நிலை உருவானதாலும், தமிழ்நாட்டிலுள்ள விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், மைய அரசின் மேற்படி 10 சதவீத கலால் வரிவிதிப்பினை மைய அரசு ரத்து செய்ய வேண்டுமெனக் கோரியும், ஏற்கெனவே நடைமுறையிலிருந்து வரும் விருப்ப வரி முறையினைத் தொடர்ந்து விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு மைய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என வற்புறுத்தியும், போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

[திரு. வி. சோமசுந்தரம்] [2003 மார்ச் 31

ஏற்கெனவே தொழில் மந்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறி நெசவுத் தொழில்மீது விதிக்கப்பட்டுள்ள கலால் வரியினால், விசைத்தறி நெசவாளர்கள் கலால் வரிக்கும் அதன் நடைமுறைகளுக்கும் உட்பட்டு பாதிக்கப்படும் சூழ்நிலை எழுந்துள்ளது என்பதைக் கருத்தில்கொண்டு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த விருப்ப வரி முறையினையே தொடர்ந்து விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், இயலாதபட்சத்தில் சிறு தொழில்களுக்கு வழங்கியதைப் போன்று ரூ.1 கோடிக்குக் குறைவாக வியாபாரம் மேற்கொள்ளும் விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு கலால் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனவும், மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களை 28-3-2003 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விசைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கும் வகையிலே தாயுள்ளத்தோடு சென்ற நிதியாண்டில் விசைத்தறிகளுக்கு உயர்த்தி நிர்ணயித்த மின் கட்டண உயர்வைத் திரும்பப் பெற்றார்கள். மீண்டும் தற்போதைய மின் கட்டணத்திலே விசைத்தறி நெசவாளர்கள் நலன் பாதிக்கப்படாமல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Point of order. அதாவது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கும்போது இப்படி 110-ன்கீழ் அறிக்கை போடுவது சரியல்ல, இதை நான் ஆட்சேபிக்கிறேன்.